103317

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கு பின்பற்றப்படும் அதே வழிமுறைகளை பின்பற்றி மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வுகள் நடத்திட அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.223

நாள் : 02.11.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 16,

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக்கல்வி (அ.தே.1)த் துறை, நாள்.22.05.2017
2. அரசாணை (நிலை) எண்.19, பள்ளிக் கல்வி(வி1)த் துறை, நாள்.13.02.2003.
3. அரசாணை (நிலை) எண்.111, பள்ளிக் கல்வி(வி1)த் துறை, நாள்.18.05.2009.
4. அரசாணை (நிலை) எண்.28, பள்ளிக் கல்வி(வி1)த் துறை, நாள்.10.02.2010.
5. அரசாணை (நிலை) எண்.268, பள்ளிக் கல்வி(வி1)த் துறை, நாள்.19.10.2012.
6. அரசாணை (நிலை) எண்.150, பள்ளிக் கல்வி(ஜிஇ1) துறை, நாள்.07.08.2013.
7. அரசாணை (நிலை) எண்.53, பள்ளிக் கல்வி(ஜிஇ1) துறை, நாள்.11.03.2015.
8. அரசாணை (நிலை) எண்.155, பள்ளிக் கல்வி(ஜிஇ1) துறை, நாள்.21.09.2015.
9. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் ந.க.எண்.156188/எச்எப்.1/2017, நாள். 20.09.2017.

-------

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும், மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, பார்வை ஒன்பதில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு (+1 மற்றும் +2) தேர்வுகளுக்கு சமமான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதால், தற்போது, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத்தேர்வுகள் நடத்துவதற்கு பின்பற்றப்படும் அதே வழிமுறைகளைப் பின்பற்றி, மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வுகளை நடத்திட அனுமதி வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

3. அரசு தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதனை ஏற்று, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத்தேர்வுகள் நடத்துவதற்கு பார்வை இரண்டு முதல் எட்டு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் பிறப்பிக்கப்பட்ட அதே நெறிமுறைகள்/ வழிமுறைகளைப் பின்பற்றி, மேல்நிலை முதலாம் ஆண்டு(+1) பொதுத் தேர்வுகளை நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
<u>நகல் :</u>
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.